**மஹவ பிரதேச சபை - 2023**
**--------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஹவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுடனான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மஹவ பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காகிதாதி இருப்புகளில் 05 உருப்புகளின் பெறுமதி ரூபா 346,642 கூடுதலாகவும் 05 உருப்புகளின் பெறுமதி ரூபா 20,120 குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது | 2024 ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் ஊடாக சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகளை வைக்க வேண்டும். |
| (ஆ) | சபையினால் மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 4 மின் விசிறிகளின் பெறுமதி ரூபா 68,400 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் வாசிகசாலை புத்தகங்களின் பெறுமதி மற்றும் அட்டவணை மீதிகளிற்கிடையில் ரூபா 308,747 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | அவதானிப்புடன் இணஞ்குவதெின. | நிதிக்கூற்றுக்களின் மீதிகள் மதற்றும் அதற்குரிய அட்டவணைகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கைத்தொழில் முற்பணம் கணக்கு விடயத்திற்காக முற்பண பதிவேடு அல்லது ஏனைய மீதி உறுதிபாடு சமர்ப்பிக்காத காரணத்தால் ரூபா 1,002,013 ஆன பொறுமதி கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | அவதானிப்புடன் இணஞ்குவதெனை. | குறித்த தகவல்களை உறுதிப்படுத்த வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| | (i) 134 பிரிவு | சபையினால் சேவை வழங்கும் அபிவிரத்தி பிரதேசங்களை பிரசுரிக்கப்பட்டு வீதவரி அறவிட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகிறேன் . | பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 | காலாவதியான பெறுமதி ரூபா 6,774,863 ஆன 209 வைப்புகளை தீர்திருக்கவில்லை. | -மேற்படி- | பிரமாணங்கள் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | பிரதேச சபை நிதி மற்றும் நிருவாக விதி | | | |
| (i) | 33 விதி | வீதவரி செலுத்துவதனை புறக்கணிக்கும் நபர்கள் தொடர்பான பட்டியல் மற்றும் | ஏற்றுக் கொள்வதெனை. | குறித்த விதி அறிவுரை பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆதன தடை செய்யும் பிடியாணை ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் வீதவரி எழுதுனரால் தயாரித்து அதனை தவிசாளரின் கையொப்பத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | | செயற்பட வேண்டும். |
| (ii) | 61 விதி | வருடாந்த கணிப்பீடொன்றை மேற்கொண்டு பெற்றுக் கொள்ளும் பட்டியலில் உள்ளடங்கும் அனைத்து கைத்தொழில்களையும், கைத்தொழல் வரி மீதான பதிவேட்டில் உள்ளடக்க வேண்டிய போதும், கட்டணம் செலுத்தும் வியாபாரங்களை மாத்திரம் பதிவேட்டில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. வரி செலுத்தாத கைத்தொழல்கள் பற்றி பதிவேடுகளில் உள்ளடக்கப்படாததுடன் அது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (iii) | 218 விதி | நியமிக்கப்படும் சபை ஒன்றினால் வருடாந்த காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான கணிப்பீடொன்றை மேற்கொள்ள வேண்டிய போதும், அவ்வாறு செய்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில் லை. | உரிய விதி அறிவுரைகள் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | உள்ளூராட்சி சுற்றறிக்கை | | | |
| (i) | இலக்கம் 2018/elocal government 01 மற்றும் 2018/07/19 கொண்ட சுற்றறிக்கை | இணைத்தினூடாக விண்ணப்பம் சமர்பிக்க மற்றும் கொடுப்பனவு நடவடிக்கைகளை செய்ய பிரஜைகளிற்கு வசதி வழங்கியிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில் லை. | சுற்றறிக்கை நியமங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) | இலக்கம் 2010/02 மற்றும் 2010/07/30 திகதி கொண்ட சுற்றறிக்கையின் 1.2. ii பிரிவு | விடய மாற்ற முறை மற்றும் அவ்வாறு செய்ய கடினமாக அலுவலர்களிற்காக 02 ஆண்டுகளிற்கு ஒரு முறை பிரிவு மாற்ற முறையொன்றை செயற்படுத்த வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | இலக்கம் 03/2015 மற்றும் 2015/11/02 திகதி கொண்ட சுற்றறிக்கை | வீதி விளக்கு பதிவேட்டை நாளாதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,802,960 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,387,653 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர்31 இல் மொத்த நிலுவை (பட்டியலிட்ட வருமானத்தில்) | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர்31 இல் மொத்த நிலுவை (பட்டியலிட்ட வருமானத்தில்) |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வீதவரியும் வரியும் | 5,569 | 5,457 | 4,605 | 852 | 5,432 | 5,520 | 4,138 | 1,382 |
| வாடகை | 9,788 | 8,319 | 5,241 | 3,078 | 20,201 | 12,135 | 8,456 | 3,679 |
| நீர் கட்டணம் | 728 | 633 | 633 | - | 830 | 545 | 545 | - |
| ஏனைய வருமானம் | 22,080 | 19,257 | 14,893 | 4,363 | 80,370 | 15,566 | 724 | 14,841 |
| மொத்தம் | 38,165 | 33,666 | 25,372 | 8,293 | 106,833 | 33,766 | 13,863 | 19,902 |

**2.2.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று வீதவரி ரூபா 1,454,674 தொகை நிலவையாக காணப்பட்டது. | அவானிப்புடன் இணங்குகிறேன். | நிலுவை மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | மாகாண சபை பிரதான செயலாளரிடம் இருந்து மற்றும் ஏனைய அலுவலர்களிடமிருந்து 2023 திசெம்பர் 31 திகதிக்கு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 5,621,131 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 6,431,597 தொகையானது. | அவானிப்புடன் இணங்குகிறேன். | நிலுவை மீதியை விரைவில் அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (இ) | பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் வாகனம் நிறுத்தும் கட்டணம் தொடர்பாக துணைச் சட்டம் விதித்திருக்காத போதும், சபை அதிகார பிரதேசத்தில் வருமானம் சேகரித்திருக்கவில்லை. | அவானிப்புடன் இணங்குகிறேன். | சபை அதிகார பிரதேசத்தில் வருமானம் சேகரிக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் ஒப்படைக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின்ன் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக கூட்டுப் பெறுமதி ரூபா 1,500,000 ஆன பாதீட்டு செய்யப்பட்ட 02 வேலைகளை மீளாய்வாண்டினுள் பூர்த்தி செய்திருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | விரைவில் பூர்த்தி செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்காக மூலதன செலவினம் மற்றும் மீண்டுவரும் செலவினம் மொத்தமாக ரூபா 11,793,037 ஆன போதும் உக்களடையும் கழிவுகள் மற்றும் உக்களடையாத கழிவுகள் விற்பனையால் கிடைத்த வருமானம் ரூபா 191,070 ஆனது. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | உக்கலடையும் மற்றும் உக்கலடையாத கழிவுகளை உரியவாறு முகாமைத்துவம் செய்து வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை வளர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி பெறவேண்டிய 12 கணக்குகளின் பெறுமதி ரூபா 28,674,093 ஆனது. | அவானிப்புடன் இணங்குகிறேன். | அறவிட வேண்டிய மீதிகளை அறவிட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி செலுத்த வேண்டிய 05 கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 23,251,680 ஆனது. | - மேற்படி - | செலுத்த வேண்டிய மீதிகளை முறையாக தீர்க்க வேண்டும் |
| (இ) | வீதவரி மதிப்பீடு 2012 ஆண்டின் பின்னர் மேற்கொள்ளாததன் மீது சபைக்கு உழைக்க முடியுமாக இருந்த வருமானத்தை உழைத்துக் கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | வருமானத்தை உரியவாறு உழைத்துக் கொள்ள வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி 09 ஊழியர்களிற்குரியதாக ரூபா 124,560 தொகையான அறவிடப்படாத கடன் மீதி காணப்பட்டது. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | ஊழியர் கடன் மீதிகளை அறவிட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களிற்காக நிலையான சொத்து பதிவேடொன்றை பேணிச் சென்றிருக்கவில்லை | அவானிப்புடன் இணங்குகிறேன். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை தகவல்கள் நாளாதுவரையாக |

| | | |
|---|---|---|
| | | பேணக் கொள்ள வேண்டும். |
| (ஆ) சபைக்கு சொந்தமான அனைத்து வீதி விளக்குகளையும் இலக்கமிட்டிருக்காததுடன் வீதி விளக்குகள் பற்றி தகவல்களை CAT கணனித் தொகுதியிற்கு உள்ளீடு செய்திருக்காததுடன் வீதி விளக்கு பற்றிய பதிவேடு மற்றும் சபையினால் பராமரிக்கப்படும் குழாய் கிணறுகள் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் தொடர்பாக நாளாதுவரையான தகவல்களை சபையிடம் இருக்கவில்லை. | - மேற்படி - | வீதி விளக்கு பற்றிய பதிவேட்டை நாளாதுவரையாக்க வேண்டும். |
| (இ) சபைக்கு சுவீகரித்திருந்த 04 மயானங்களின் பெறுமதி மற்றும் கதுருகஹமுலவில் அமைந்துள்ள காணியின் மற்றும் இரண்டு கிளினிக் நிலையங்களின் பெறுமதிகளை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | காணிகளின் பெறுமதியை மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) சபையினால் பராமரிக்கப்படும் 04 வாகனங்கள், 172 மயானங்கள் மற்றும் பொது கிணறுகளுடன் கூடிய 09 காணிகள் மற்றும் பெறுமதி ரூபா 11,527,767 ஆன 09 காணிகள் மற்றும் பெறுமதி மதிப்பிடப்பட்டிருக்காத 20 காணி சொத்துக்களை சபைக்கு சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | அவானிப்புடன் இணங்குகிறேன். | உரிமைகளை சுவீகரிக்க வேண்டும். |
| (உ) சபையினால் பராமரிக்கப்படும் 115 குழாய்க் கிணறுகளில் 05 செயலற்ற நிலையில் காணப்பட்டன. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | பயன்பாட்டிற்கு ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். |
| (ஊ) பிலிசரு நிலையத்தில் காணப்படும் பெறுமதி ரூபா 525,000 ஆன 02 டெக்டர்கள் பண்டக கணிப்பீட்டு சபையினால் பராதீனம் செய்ய பரிந்துரைத்திருந்த போதும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை அவ்வாறு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவானிப்புடன் இணங்குகிறேன். | பண்டக கணிப்பீட்டு பரிந்துரைகளை விரைவில் செயற்படுத்த வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகார ஆளணியினரில் 41 வெற்றிடங்கள் மற்றும் 26 மிகையும் நிலவியதுடன் அங்கீகார ஆளணியினரை விஞ்சி அமைய, | அவானிப்புடன் இணங்குகிறேன். | அங்கீகார ஆளணியினரை பேணிக் கொள்ள |

| | | |
|---|---|---|
| பதிலீடு, ஒப்பந்த அல்லது நாட் சம்பள அடிப்படையில் கீழ் ஆட்சேர்ந்த ஊழியர்கள் 25 ஆனது. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாலுகையும்

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 09 இனை இனங்கண்டிருந்த போதும், அந்த நோக்கங்களை அடைந்து கொள்ளவதற்கான இலக்கு மற்றும் சுட்டிகளை முறையாக இனங்கண்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ள தேவையான பொருண்மையான முறைமையை தயாரித்து செயற்பட வேண்டும் |